**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW14 |
| நாள் | : | 04.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மு.இளங்கோ | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | முனுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது திருவாலங்காடு காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.03.2024 அன்று பொதட்டுர்பேட்டை காவல் நிலைய உதவி ஆயவாளராக பணியில் இருந்த போது புகார்தார் ரோசையா என்பவர் கொடுத்த புகாரினை பெற்று காவல் நிலை குற்ற எண்.145/2024 இதச பிரிவு 294(பி), 323, 324, 506(2) படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அதன் படி அன்றைய தினமே மாலை 04.30 மணிக்கு சம்பவம் நடந்த இடமான ஐங்கரபள்ளி கிராம விநாயகர் கோவில் தெரு சிரஞ்சீவி என்பவரின் வீட்டின் அருகே சாட்சிகள் கண்ணப்பன், சிரஞ்சீவி ஆகியோா் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.த.சா.9 மற்றும் அ.த.சா.10** ஆகும். பிறகு எதிரிகளை தேடிவந்த நிலையில் 03.03.2024 அன்று நெடுங்கல் பேருந்து நிலையம் அருகே காலை 11.00 மணிக்கு எதிரி சண்மூகத்தை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கிரண்குமார் மற்றும் புரகரய்யா ஆகியோா் முன்னிலையில் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ 11** ஆகும், மேலும் இந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய வேலிகாத்தான் கட்டையை அடையாளம் காட்டி ஒப்படைப்பதாக கூறியதன் அடிப்படையில் சுமார் 12.45 மணியளவில் ஐங்காளபள்ளி பேருந்து நிலையம் அருகே மறைத்து வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து ஆஜர்

செய்த வேலிகாத்தான் கட்டையை அதே சாட்சிகள் முன்னிலையில் கைபற்றுதல் மகசர் முன்னிலையில் கைபற்றினேன். அந்த கைபற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ 12** ஆகும். மற்றும் சா.பொ.1 ஆகும். பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து கைது நடவடிக்கை முடித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அதன் பிறகு புகார்தாரரான சாட்சி ரோசைய்யா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் கண்ணுற்ற சாட்சிகளான கஜேந்திரன், சந்திரபாபு, ஜகதம்மாள், மல்லிகா, மோகனா ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகளான புவனேஷ்வரி, சந்திரசேகர், கௌதமன், கோட்டீஸ்வரன் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே போல் பார்வை மகசர் சாட்சியான சிரஞ்சீவி, கண்ணப்பன் ஆகியோர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளான கிரண்குமார், புரகரய்யா ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 06.03.2024 அன்று மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சண்முகம் என்பவர் இறந்து விட்டதனால் கிடைத்த தகவலின் அடிப்படையில் சட்டபிரிவு மாற்றம் செய்து 294(பி) 323 324, 506(2) லிருந்து 294(பி), 302, 506(2) என பிரிவு மாற்றம் செய்தேன். அந்த சட்டபிரிவு மாற்றம் அறிக்கை **அ.த.சா.13 ஆகும்.** மேற்படி வழக்கானது கொலை வழக்கு என்பதினால் இந்த கோப்பினை விசாரணைக்காக காவல் நிலைய ஆய்வாளருக்கு பார்வைக்கு வைத்தேன். மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

புகார்தாரரினை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இறந்த நபரை மேற்கண்ட புகார் கொடுத்த தேதியில் விசாரணை செய்து எந்தவிதமான வாக்குமூலத்தையும் நான் பதிவு செய்யவில்லை என்றால் அவர் சுயநினைவின்றி இருந்தார். மேலும் நான் 02.03.2024ந் தேதியன்று தான் புகார் பெற்றேன் என்றால் சரிதான். சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன் மேற்படி சம்பவம் 05.02.2024 அன்று நடைபெற்றது. மேலும் சட்டபிரிவு மாற்றம் 06.03.2024 அன்று பிரிவு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்றபத்திரிக்கை நீங்கள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் வழக்கு கொலை வழக்காக மாறியதால் அது ஆய்வாளர் வரம்பரைக்குள் வருகிறது. இந்த வழக்கில் இறந்தவர் மது போதையில் இருந்ததால் நிலை தடுமாறி கீழே விழுந்து தலையில் அடிப்பட்டதால் இந்த இறப்பு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை சரியாக செய்யாமல் எதிரி மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.